# வேதாகமப் பாடங்கள்

*"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்
பிரகாசம் போ-ருக்கும்."*

*தொகுதி 4*

# அர்மகெதோன் யுத்தம்
# THE BATTLE OF ARMAGEDDON

*"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையி-ருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.......... மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளிலே நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது..... அப்பொழுது எபிரேயு பாஷையிலே* ***அர்மகெதோன்*** *என்னப்பட்ட இடத்திலே அவர்களை கூட்டிச் சேர்த்தான்." (வெளி : 16:12-16)"*

*முதல் பதிப்பு : 2011*

**சென்னை வேதமாணவர் சபை**
*22, முதல் தெரு, ராஜீவ் நகர்,*
*காலடிப்பேட்டை, சென்னை - 600 019.*

STUDIES IN THE SCRIPTURES
VOLUME IV

THE BATTLE OF ARMAGEDDON
*Tamil Version*

I Edition 2011 - 2000 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**BANGALORE BIBLE STUDENTS**
*&*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, First Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottiyur,
Chennai-600 019,
India.

## <u>*அர்ப்பணிப்பு*</u>

***ராஜாதிராஜாவுக்கும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்***

*புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்*
*பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்*
*மற்றும்*
*கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்*
*மற்றும்*
*தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து*
*தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக*

***இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.***

**இ இ இ**

*"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்*
*இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கறதற்கு," "அந்தக்*
*கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்*
*பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது*
*விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்*
*குள்ளே கூட்டப்படவேண்டு மென்று*
*தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்*
*முடைய தயவுள்ள சித்தத்*
*தின் இரகசியத்தை எங்*
*களுக்கு அறிவித்தார்."*
*(எபே. 3:11;ண 1:8 - 10)*

**இ இ இ**

***போதகர் ரசல் அவர்களால் 1897ல் எழுதப்பட்டது.***

**இ இ இ**

# வெளியீட்டாளரின் முன்னுரை

"அர்மகெதோன் யுத்தம்" என்கிற இந்த நூலானது மிகமுக்கியமான உலக சம்பவங்களின் மீது வேதத்தின் தீர்க்கதரிசனங்களை மையப்படுத்துகிறது. 1897ல் எழுதப்பட்ட இது அந்த காலகட்டத்தினுடைய சீர்திருத்தத்தை தூண்டிவிடும் காரணிகளின் வழிகாட்டுதலையும், அதிகாரத்தையும் விவரிக்கிறது. இவைகளே 1914ல் "புறஜாதியாரின் கால"த்தின் முடிவு சமயத்தில் இராஜ்யங்களின் வீழ்ச்சிக்கு காரணமாய் இருந்த சக்திகள் ஆகும். மேலும் இவைகள் சமுதாய ஒழுங்குகள் யாவற்றையும் தரைமட்டமாக்கிவிடும். இந்த உலகம் தன்னுடைய கடைசி யுத்தத்தை நோக்கி இரக்கமற்று இழுக்கப்படுவதின் நிமித்தம் இந்த புத்தகத்தின் மீதான நம்பகத்தன்மை கூடிக்கொண்டே வருகிறது. கட்டுப்படுத்தமுடியாத இந்த போராட்டத்தை விட்டு வெளியே வர ஒரு வழியைத் தேடுவதில் உலகத் தலைவர்கள் மிகவும் களைப்படைந்து வருவதை குறிப்பாய் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது.

தி வேர்ல்டு மேகசின் (ஆகஸ்டு 30, 1914) என்கிற அந்நாட்களின் குறிப்பிடத்தக்க ஒரு பத்திரிகையில், ஆசிரியருடைய முன்கூறப்பட்ட காரியங்களைக் குறித்து எழுதப்பட்டது. "ஐரோப்பாவில் ஆரம்பமான பயங்கரமான போர் அசாதாரணமானதொரு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது." வேதத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருக்கும் கோபாக்கினையின் நாள் 1914ல் உதயமாகும் என்று கடந்த 25 ஆண்டுகளாக வேத மாணவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர்."

தி கிரேட் ஐடியாஸ் டுடே, 1963 பிரிட்டானிக்கா கிரேட் புக்ஸ், என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா, இங்க், பக்கம் 107, 108ல் கீழ்கண்டவற்றின் பிரதிப-ப்பு இருந்தது. "விஞ்ஞானம் மற்றும் வளர்ச்சியினால் வசீகரிக்கப்பட்டு தன்னையிழந்த உலகமானது, 1914ல் இவ்வுலகம் முடிவுக்கு வரும் என்று வெகுகாலத்திற்கு முன்பே குறிப்பிட்டுக்கொண்டிருந்த சமய பிரிவுகளின் ஆன்மீக நம்பிக்கையை கே- செய்தது; ஐம்பது வருடங்களுக்குப் பிறகு 1914ல் உலகம் முடிவுக்கு வரவில்லை என்பதைக் குறித்து அத்தனை நம்பிக்கை உடையதாக இல்லை.

உலகத்தை உற்று நோக்குகிறவர்கள் உலகின் மீது 1914ன் விளைவுகளைக் கவனிக்காமல் போனார்கள். உற்றுக் கவனித்த ஒருவரின் விமர்சனம் இதோ: "ஒரு சகாப்தத்தின் முடிவையும், அடுத்ததின் ஆரம்பத்தையும் எப்போதாவது ஒரு வருடம் குறிக்கும் என்றால், அது 1914 ஆகும். பாதுகாப்பின் உணர்வைக் கொண்டிருந்த பழைய உலகத்திற்கு அந்த வருடம் ஒரு முடிவைக் கொண்டு வந்தது; அனுதினமும் பாதுகாப்பே இல்லாத பிரதான நாகரீக காலத்தை ஆரம்பித்து வைத்தது." (ரவுஸ் ஆக்ஸ்ஃபோர்ட் சரித்திர மற்றும் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் ஜூன் 28, 1959).

துண்டு துண்டாகிப்போன இக்கால உலகமானது, புதுவிதமான அரசாங்கத்தையோ அல்லது இயக்கங்களையோ இனிமேல் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. இது தற்போது சோஷ-சம், கம்யூனிசம், நேஷன-சம் அல்லது இது போன்றவைகள், உலகத்தின் சுகவீனத்துக்கு பரிகாரம் அல்லது மாற்றுவழி என்பது போல் பார்க்கிறது? அர்மகெதோன் நமது காலத்தில் இருப்பது போல் அத்தனை உண்மையாயும், தப்பிக்க முடியாததாயும் என்றுமே இருந்ததில்லை. அனால், அதன் உச்சக்கட்டம் இன்றும் வரவில்லை என்பதைக் கூட ஆசிரியர் காண்பித்திருக்கிறார். கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி, அரசாங்கத்தின் மீது கொண்டிருக்கும் மானிட முயற்சிகளை சீர்படுத்துகிறதாக இருக்கும். தற்போதிருக்கும் நம்பிக்கையைப்போல் நேசமாயும், அதிகப்படியாய் வரவேற்கப்பட்டதுமாய் இதுவரை இருந்ததில்லை. உண்மையில் உலகத்தின் ஒரே நம்பிக்கை இதுதான்.

ஆசிரியர் அவர்கள் நாளிதழ்கள், பத்திரிக்கைகள் மற்றும் 1890ல் எழுதப்பட்ட சொற்பொழிவுகளில் இருந்து விஸ்தாரமான விஷயங்களை சேகரித்தார். இந்த வசீகரமான காரியங்களை சரித்திரமாகவும், காரணம், விளைவுகளுடைய அடிப்படை கொள்கைகளின் செயல்முறை விளக்கமாகவும் அநேகர் கண்டுகொள்வர். நாங்கள் இதயபூர்வமாய் இந்த புத்தகத்தை வெளியிடுகிறோம். மேலும் தீர்க்கதரிசனத்தின் ஆழ்ந்த அறிவினை அதனுடைய மிகச்சிறந்த பாணியில் இது அளிக்கிறது. இதைக்குறித்து உங்களது தியானத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**- வெளியீட்டாளர்-**